உ

சிவமயம்.

அருட்பெருஞ்சோதி

திருவருட்பிரகாசவள்ளலாரென்னும்

சிதம்பரம்

# இராமலிங்கசுவாமிகள்

## தோத்திரங்கள்

இவை

சமரசவேத சன்மார்க்கசங்கத்துவித்துவான்களி
லொருவராகிய

**பொ-சுந்தரம்பிள்ளையவர்களால்**

இயற்றப்பட்டு,

ஷை பிள்ளையவர்கள் குமாரர்
பொ-பரமசிவம்பிள்ளையவர்கள் மாணாக்கரும்
தாரமாநகரம் விஸ்வகுலாதிபராகிய ம-ா-ா-ஸ்ரீ,
முனுசாமி ஆசாரியாரவர்கள் குமாரருமாகிய,
ம-ா-ா-ஸ்ரீ,

**டி. எம். சிங்காரவேலு ஆசாரி**

அவர்களால்

சென்னை
ஹிந்து ராயல் தியாட்ரிகல் பிரஸில்
பதிப்பிக்கப்பட்டன.
1900.

இஃது

இந்நூலாசிரியர் மருகரும், சைவ புராணிகருமாகிய
பிரசங்கரத்நாகரம்

## சிதம்பரம் - வடிவேலுபிள்ளை யவர்களியற்றிய

குருஸ்துதி,

அறுசீர் - விருத்தம்.

அருண்மிகுத்த வருட்பிரகாசப் பேர்கொண்டுறைநீ நல்லரியதெய்வப், பொருண்மிகுத்த விராமலிங்கப்பிள்ளையாஞ் சாமிநீ யிளையபிள்ளை, தெருண்மிகுத்த வானுடைய பிள்ளையரு ளமுதுண்ட பிள்ளையென்றே, ஒருமையன்றுரைத்த வருட்பாவறையு முன்பெருமை யுரைப்பாரியாரே.

---

இஃது

இந்நூலாசிரியர் குமாரர்,

## பொ-பரமசிவம்பிள்ளையவர்களியற்றிய

குருஸ்துதி.

அறுசீர் - விருத்தம்.

இங்கிதமாலைக் குரியவிலக்கண நற்பொருள் விரிப்பாரில்லைராம, லிங்கனெனு மருள்வள்ளா லிலிங்கவடிவனுள் வெளிநீயியம்பவல்லை, பொங்குபுவி நாவலர்களல்லராய்ப் புறங்கொடுக்கும் புகழ்பெற்றோங்குந், தங்குதிருவருட்பாவை யுரைத்தனைநீ தமையுணர்ந்த தன்மையாலே.

---

சிவமயம்.

அருட்பெருஞ்சோதி.

---

## நிலமண்டில ஆசிரியப்பா.

கயவென்கிளவி மேன்மையுஞ்செய்யும்
நயமதநறும்பூ நயவாதுறுமோர்
இருகையானையை யொத்திருந்தெனுமோர்
திருவாசகத்தின் தெய்வப்பொருடேர்
அருட்பிரகாச வள்ளலெனுமோர்
ஒருராமலிங்க நீயுரைத்தசமரசம்
உயர்ந்தசித்தாந்த வேதாந்தவுயர்பொருட்
பெயரநுபவங்கள் பீடுறுகுருமுக
வழியேவிளங்கும் வளருஞ்சாக்கிர
சுழுத்தியாகுந் தோமிலாவஃதே
அருமையருமை யாகுமஃதே
பெருமையாகும் பிறங்கியவிளக்கம்
ஆங்காரமில்லர வருள்கண்டவிடம்போற்
றாங்குறபாசந் துலங்குஞ்சித்தாந்தம்
பண்பிலுலகைப் பற்றாதுணர்ந்து
தண்மையிலையந் தானறல்சுழுத்தி

சின்மயமேக வறிவுருசிவ மே
தொன்மையழியாச் சுத்தமவுன ம்
வேதாந்தமுடியில் விளங்குமநுபவ ம்
நாதாந்தபோதம் நழுவினர்க்காகு ம்
ஒன்றையுஞ்சுட்டா தொழிந்தேயிருக்கி ன்
ஒன்றும்மனஞ்சிவத் தொடுங்குமதைக்ய ம்
ஆகுமென்றே யருமறைகூப்பிடு ம்
போகுதலில்லாப் பொருண்மணிக்கதிய து
சும்மாவிருக்குஞ் சுகஞ்சுகமது வே
அம்மாமறைமுடி பறைவதுமன் றி
பதியேயறிவாம் பகுத்தறிவுசீவ ன்
அதுவிதுவெனச் சுட்டறிவெபாச ம்
அநாதிசிவஞ்சகத்து மாருயிரொன்றெனு ம்
அநாதிசிவாத்வைத மங்ஙனமாகு ம்
ஆகமமிருபத் தெட்டின்முடிபா ம்
ஆகமம்வாதுள மதனிலறி வே
ஏகமென்றியம்பு மறையநுகரித் தே
சோகமகன்ற சுகாநுபவம து
சித்தாந்தம்மறிவுக் கறிவெனுஞ்சீ ர்
சுத்தவறிவெனுஞ் சுருதியினந்த ம்
அத்வைதப்பொரு ளிரண்டல்லதெனின ங்

கொத்தபொருளொன் றாகாவாகி | ன்
இலக்கணவழுவன்றி வேறொன்றிய | லா
இலக்கணவழியா லியலும்பசுக்க | ள்
அநந்தமாகுமா யினொங்தொழி | ல்
முனமுறுமுத்தி முடிபிற்கிணங்கு | ம்
இனமெங்நாளு மேற்குமஃ | தே
கனம்பொருடுவிதங் காணத்வைத | ம்
அதுவேதங் தானாகமம்ஒருபொரு | ள்
அதுவாகாத வருள்வேதாந்த | ம்
சாத்திரமன்றி சதுர்மறையா | கா
நேத்திரமணிபோ னிமிருமிருபொரு | ள்
ஆகலினங்கமு பாங்கமாகு | ம்
சோகமில்சோதிட முதலாறங்க | ம்
அங்கமுபாங்கமாம் வைசேடிக | ம்
துங்கவேதாந்த முதலாறும் | மே
ஆகுமிலக்கண வருமறையாகம | ம்
பாகுபாடுறுபொருள் பகருமாங் | கே
அநாதிசிவமே யாகும்பசுக்க | ள்
அநாதிபாச மநாதிவழக | கை
யாரறிந்துரைப்பா ரறிவாய்நீ | யே
பேரறிவுடைய பெருமையா | ளா

சமரசம்வகுத்த தனமைமயீதெ - ன்
றமருமறிஞரியாரிங்கறிவா ர்
அருள்வாய்நீயே யருமறையாகம ம்
பொருளீதென்றே புகல்வாய்நீ யே
போற்றிபோற்றிநின் பொன்னடிபோற் றி
ஆற்றிலேனரசே யப்பாபோற் றி.

முற்றிற்று.

---

உ

துதிகள்.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

---

அருட்பெருஞ் சோதிதனிப் பெருங்கருணை
யரும்பொருட் சிவமஃதாங்கே
ஒருபெருஞ் சோதியாகு மற்றெல்லா
முறுசடச் சோதியென்றுரைக்கும்
ஒருபொருட் டெனியாயொரு சிதம்பரமா
யுறும்பெரும் கருணையேயென்றும்
ஒருபெருங் கதியாயுறுபொரு ளுனக்கு
மொருராமலிங்க நீயருள்வாய். (க)

உத்தரஞான சிதம்பரமென்றே யுரைத்தனை
யொருபொரு ளுரைக்கின்
சுத்தவைதீக ஞானமதொன்றே யுறுபொருள்
தோடிலா வடலூர்
முத்திக்குவித்தா யுறுமிடமிஃதென்
றுரைத்தனை முழுச்சிதம்பரமப்
புத்தமுதுறு பொன்னம்பலம் வெளியோ
டுறுசைவம் பொலிவதுகண்டே. (உ)
சித்திவளாகந் திருவளர்மேட்டுக்
குப்பமொன்றதன் பொருடெரிக்கின
சித்திகளனைத்துந் தருமிடமாகிச்
செம்பொருள் விளக்குறுமிடமாய்
முத்திநல் வளப்பமுழுப் பொருட்கிடமாய்
முயங்குநின் மோனநன்மேனி
இத்தலமறிய மறைக்குதற் கிடமென்
றியம்பவொ வியம்பினையெந்தாய். (௩)
சமரசவேதப் பொருள்வெளிப் படுமே
வென்றுரைத்தே யதுசார்ந்த
சமரசப்பொருள்கொண் டோங்குசன்மார்க்க
சங்கமு முளவெனவுரைத்தாய்
சமரசமுறு நற்குணமுடையவரே

சதிருட னறிவதல்லாது
சமரசமகன்ற தமகுணமுடைய ரறிவரோ
ச்சாமிநீ யருள்வாய். (௪)
அருள்வளர் சபைசூழ்யோக சாலையுமே
யதன்புடை சூழ்ந்துறுஞான
உருவளர் கல்விச்சாலையு மதன்பா
லோங்கிய வயித்தியசாலை
மருவள ரன்னசாலையுந் தானேவகுப்ப
னென்றருளினை முனமக்
குருவளர் சன்மார்க்கம்பெறு சங்கங்கூடுறக்
காணுநா ளெந்நாள்.
முற்றிற்று.

உ

ஸ்ரீ அகண்டானந்த அத்வைத சொரூபாகிய
சுகப்ரமமத்துக்கு
ஸ்ரீவியாசபகவான் முதலிய நால்வரால்
அநுக்கிரகஞ் செய்யப்பட்ட

# சுருதிசாரம்.

மூலமும் உரையும்.

திருமூலர் மரபில் சுத்தாத்வைத வேதாந்த
சித்தாந்த சமரச ஞாநாசிரியராய
எழுந்தருளிய

## முத்துகிருஷ்ணப்ரம்மம்

அவர்களால்,

பலபிரதிகளைக்கொண் டாராய்ச்சிசெய்வித்து,
ஷையாரால் ஆங்காங்கு சேர்க்கப்பட்ட
மேற்கோளுடன
ஸ்ரீகைலாசபரம்பரை காசிமடம்
திருப்பனந்தாளாதீனம் (கரு) வது பட்டம்
மகா கனமபெற்ற
இராமலிங்கத்தம்பிரான் சுவாமிகள்
உதவியினால்,
ஙா-ஙா-ஸ்ரீ. அ.இரத்நவேலுசெட்டியாரால்,

சென்னை:—ஆ. ம. அ. வே. ஆரியர் முத்தமிழ
வாணிபீடம் பிரஸில் பதிப்பிக்கப்பட்டன.
Registered Copy-Right.—2/1/8/70.

உ

சுபமஸ்து.

# விளம்பரம்.

சுருதிசாரம் மூலமும்-உரையும்,

குருதோத்திரம்மூலமும்-உரையும்,

அருளானந்தமுறை,

அருளானந்தகிர்த்தனை,

திருமூலர் தத்துவக்கட்டளையும்
பிண்டோற்பத்தியும.

சுகாவதாரமான கபீர்தாஸர் முதலிய சரித்திரங்கள் அடங்கிய ஸ்ரீமஹாபக்தவிஜயம்.

ஆகிய, இப்புத்தகங்கள் வேண்டியவர்கள் திருவொற்றியூர் நெடும்பாட்டை அருணாசலீஸ்வரர் கோயிலுக்கு எதிரிலிருக்கும் திருமடத்தில் விலைகொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

கலி-௪௯௭௨-ஞ பிரமோதூத௵ கடக௴.

☞ Registered Copy-Right.

1st August 1870.

உ

திருச்சிற்றம்பலம்.

# சாற்றுகவிகள்.

இஃது.

திருப்போரூர்ச் சிதம்பரசுவாமிகளாதீனம்

ஒன்பதாவது பட்டம்

## முத்துக்குமாரசுவாமிகள்

திருவாய்மலர்ந்தருளியது.

—o—

(எழுசீராசிரியவிருத்தம்)

சீர்பெற்றவியாசாதி நால்வரால்சுகப்ரம்ம
சிற்சிவானந்தருக்கே,
ஏர்பெற்றபோதனைசெய் சுருதிசாரம்மெனு
மின்பநூலிந்நாளினில்,
பார்பெற்றவுயிருய்ய வருளினலெண்ணியே
பற்பலவுதாரணத்தோ,
டேர்பெற்றமுத்துகிருஷ் ணப்ரம்மமெளிதச்
சியற்றுவித்தனனினிதரோ. (க)

இ ஃ து.

ஸ்ரீமுத்துகிருஷ்ணப்ரம்மத்தின்
தலைமை அடியாரு ளொருவராகிய
கொங்குறைப்பட்டி

## சுந்தரானந்த ப்ரம்மம்

திருவாய்மலர்ந்தருளியது.

(பதினான்குசீராசிரியவிருத்தம்)

திருமருவுசோதியாய் வளர்வியாசமுனியாதி
ஜெனகராற் சுகர்தனக்கே,
திண்செவியிற்போதனைசெய்சுருதிசாரம்மெனுஞ்
சிறப்புற்ற நூலுகருமெய்க,
குருவானசிவரகசியமாதியாகமங்
கொண்டுமிகமேறகோளுடன்,
குறியறிந்தவரொலாஞ் சங்கையறநிச்சயங்
கொண்டாட விந்நாளிலே,
பெருமைபெறுமிவ்வுலகி லசசிட்டளித்தனன்
பெரியதிருமூலர்மரபில,
பேர்பெற்றவேதாந்த சித்தாந்தசமரசப்
பிரிவிலானந்தபோதம்,
கருவுருவில்வாராது கண்கண்டதெய்வமாய்க்
கருத்திற் பொருந்தியாடும்,
கண்மணிதனக்குரிய முத்துகிருஷ்ணப்பிரம
மப்பனுங்கடவுண்மாதோ. (௨)

இஃது.

ஷை- முத்துகிருஷ்ண ப்ரம்மத்தின்
தலைமைஅடியாருளொருவராகிய
## தஞ்சாவூர் - ஆறுமுக ப்ரம்மம்
திருவாய்மலர்ந்தருளியது.
(பதினான்குசீராசிரியவிருத்தம்)

பூலோகமதனிலே தர்மார்த்தமாதியாய்ப்
புருடார்பெறுமாறுநோக்கிப்,
புனிதத்தவத்திருல வருவியாசமுனிவன்
பொருந்துமறைகலைகளெல்லாம்,
சாலோகசாமீப சாரூபசாயுஜ்ய
பதமெலாந்தந்துமேலும்,
தநயனஞ்சுகர்தனக் கின்பமாய்ப்போதித்த
தக்கநற்சுருதிசாரம்,
மேலோகமறியாத வண்ணமாநூலுக்கு
மேதினியிலெவருமுய்ய,
மேன்மைமிகுசிவரகசியமாதிநூல்தனை
மின்னல்பெறமேற்கொளுடன்,
கோலமாயிந்தனடிமைகொண்டாண்டவென்
குருநாதனிருகழலிணைக்,
கும்பிட்டிவந்தனஞ்செய்முத்துகிருஷ்ணப்ரம்
மமமெனுமாதுரைப்பெருவே. (௧)

சாற்றுகவிகள் முற்றுப்பெற்றன.

உ

சுபமஸ்து.

ஸ்ரீபரமகுருவேநமஃ.

# சுருதிசாரம்.

(எண்சீராசிரியவிருத்தம்.)

தேசிகன்றன்னடிவணங்கிச்சுருதிசாரத்திற னுரைப்பாஞ் சுகர்கருபதே சித்திடும்வாக்கியங்கள், ஆசில்பிரபஞ்சமதே ப்ரம்மோஹமேக மேவாத்வைதம்ப்ரம்மோஹ மதற்கப்பாலாய்ப், பேசியபாவாபாவா தீதம்ப்ரம்மோஹம் பேசரியசுவாநுபவா தீதம்ப்ரம்மோஹம், நாசமிலாதிவைநான்குவாக்கியங்கடம்மை நாரதாதியர்கால்வர் நவின்றிட்டாரன்றே. ... ... ... ... ... ... *

(இ-ள்) வாலறிவனாகிய ஞானாசிரியனது தாளாகிய திருவருளை வணங்கி, அவ்வருளின் பயனாதலான வேதசாரமாகிய உண்மைப்பொருளின்பதத்தைச் சுகப்ரம்மத்துக்கு உபதேசித்திடுவதாகிய வாக்கியங்களை இங்ஙன

ம் உரைப்பதாவதேதென்னில், குற்றமற்றதாய் விளங்கப் பட்ட நாமரூபாத்மக பிரபஞ்சமெல்லாம் அதுவேயாயச் சேடிக்காநின்ற ப்ர்ம்மம் யாது அதுவே நாமென்றும், இங்ஙனம் சொரூபமொன்றேயொழிய இரண்டில்லையென் பதான அத்வைதப்ரம்மமே நாமென்றும், அதற்கு மேற் சொல்லிய பாவமாகிய உள்ளதான அதிஷ்டானத்திற்கும் அபாவமாகிய வில்லாததான ஆரோபதிறகும் அதீத ப்பட்ட ப்ரம்மமே நாமெனறும், வாக்குமனத்திற் கெட்டாததாயும், அதிஷ்டானமு மாரோபமுமற்ற சுவானுப வத்திறகு அதீதப்பட்டதாயும் விளங்கிய ப்ரம்மமே நாமென்றும், ஒருதுன்பமுமில்லாததாகிய இந்நான்கு வாக்கியங்களையும வியாசர் நாரதர் தக்ஷிணாமூர்த்தி ஜனகமஹாராஜா ஆகிய நால்வரும் சுகா விஞவுககு விடையாக உரைததருளினர்.—எ-று. (௧)

## கவி.

வெறும்பழுதையேபாம்பாம் விவர்த்தத்தா
லு மேவுசுகதுக்கமொன்றாய் விடலாற்பாலன்,பெ
றும்பிதாவேயெனுமா ரம்பத்தானும் பெய்தயிரு
மபால்தானே யென்றுபேசல், உறும்பரிணாமத்
தானு மொககத்தோன்றி லொன்றுறிலொன்றொ
ழிக்குநித்தங் கூடாததத்தால், தெறும்புனலேயலை
யாமுற் பத்தியாலுஞ் செகம்ப்ரமமோ வறம்மென்
றே செப்பலாமே. ... ... ... ... ... *

(இ-ள்.) புத்தியினது பிராந்தியினாலே விகாரமற்ற பழுதையினிடத்துப் பாம்பெனத்தோன்றிய விவர்த்த பக்ஷத்திலே தோற்றுவதாகிய திட்டாந்தம் நான்குண்டு. அஃதெங்ஙனமெனின், ஆரம்பம், பரிணாமம், உற்பத்தி, நித்தியம், என்று வேதத்திலே இந்நான்கு திட்டாந்தங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அதில் ஆரம்பதிட்டாந்தமாவது, தகப்பனிடத்துண்டான குழந்தையினது சுகதுக்கத்தையந்தத்தகப்பன் அடைவதுபோல ப்ரம்மத்தினிடத்திலிருந்து பிரபஞ்ச முண்டாயிற்றென்னில், ப்ரம்மத்தினுடைய சச்சிதானந்த குணம் பிரபஞ்சத்துக்கு வரவேணடும். அப்படியில்லாமல் அசத்தாய்ப்போகின்றபடியாலும், ப்ரம்மத்துக்கு பிரபஞ்சம் சற்றும வேறொன்றில்லாததினாலும, ஆரம்பதிட்டாந்தமுங்கூடாது. பால் தயிராவதுபோல ப்ரம்மந்தானே பிரபஞ்சமாகப் பரிணமித்ததென்றால், தயிர் பாலாகாததுபோல பிரபஞ்சமாகப்பரிணமித்து ப்ரம்மமாகாதபடியினாலே பரம்மம் பிரபஞ்சமாகப் பரிணமித்ததென்று பரிணாமதிட்டாந்தமுங்கூடாது. சலத்தினிடத்திலுண்டான அலை திவலை நுரைகள் அச்சலத்திலயமாவதுபோல ப்ரம்மத்திலேயுண்டான பிரபஞ்சம அவ்வண்ணமே லயமாகவேணடும். அப்படியுண்டாயிருந்து லயமாகாதபடியினாலே ப்ரமமத்திலேயிருந்து பிரபஞ்ச முற்பவித்ததென்று உறபத்திதிட்டாந்தமுங்கூடாது. ப்ரம்மத்தைப்போலப் பிரபஞ்சமும் நித்தியமாமோவெனில், அதுவு மொன்று தோன்றில் ஒன்றொழிவதாகையால், நித்தியதிட்டாந்தமுங்கூடாது. இந்நான்

கு திட்டாந்தங்களிலேயுங் கூடாதெனில், சித்தாந்தமியா தென்ற சங்கைக்கு இந்நான்குதிட்டாந்தங்களும் விவர்த் தபக்ஷத்திலே சித்தாந்தம்; அஃதெங்ஙனமெனில்,பழுதை விகாரமற்றிருக்க அதிற் பாம்புணடென்பது ஆரம்பதிட் டாந்தம்; பாம்பெனவேநிச்சயித்தல் பரிணாமதிட்டாந்த ம்; பாம்பினது சலனத்துவங்கண்டது உற்பத்திதிட்டா ந்தம்; பழுதையுண்டானபோதே பாம்புண்டென்பது நி த்தியதிட்டாந்தம். இங்ஙனம் நான்கிற்கும் பிரயோச னம் விவர்த்தபக்ஷத்திலுணடானதாகையால், விவர்த்த பக்ஷமே சித்தாந்தமெனக்கண்டு, மெ[ய்] புளில் விவர்த்த த்தாலுமென்று முதன்மைதோன்றச்சொனனார். ஆதலா ல், பழுதைவிகாரமற்றிருக்க அதனிடத்திலுணடான பா ம்பு சகல விவகாரத்துக்கு மிடமாறுறபோல ப்ரம்மம் நிர்விகாரவாத்மாவாயிருக்க அதனிடத்தில் பிரபஞ்சம்வி வர்த்தமேயல்லது வேறல்ல. ஆதலால், பிரபஞ்ச விவர் த்தம் ப்ரம்மமே; யஹமென்று வியாசபகவான் அருளிச் செய்தார். எ-று. முதற்செய்யுளில் நாரதாதியர் நவி ன்றுமொன்றது செய்யுள்நோக்கிய பின்வைத்துக் கூறினு ரென்பதறிக.

பிரபஞ்சமதே ப்ரம்மோஹ மென்பதற்குப் ‘பிரமா ணம். (சிவரகசியம்) நான்பிரமநீபிரமநானுவாக நா டியிடுமுலகமெலாம் பிரமரூபங், தான்பிரமந்தமர்பிரம ந்தனககுவேறுய்த் தயங்கியிடுஞ்சனங்களெலாம்பிரமரூ பங்,கோன்பிரமங்குருபிரமங்குறித்துக்கண்ட கூறுபடும்

பொருளெல்லாம்பிரமரூபங், கான்பிரமங்கிரிபிரமங்கா ஞநின்ற காரணகாரியமெல்லாம்பிரமரூபம். அன்றியும், பூதமொடுபௌதிகமும்பிரமரூபம் புவனமொடுபொருள் களெல்லாம்பிரமரூபம், சாதமுறுஞ்சகமெனவையும் பிரம ரூபஞ் சனியாதசகமெவையும் பி ரூபம், பேதமெனத் தெரிவதெலாம்பிரமரூபம் பிரமாண்டகோடியெலாம்பிர மரூபம், மாதவவப்பரப்பிரமநானேயென்று மயக்கமற ப்பாவித்தேமனதைவெல்வாய். அன்றியும், சுத்தசிதாகா சமதாநிட்பிரபஞ்ச சொரூபத்திற் பிரபஞ்சமென்றுமில் லை, இத்துவிதப்பிரபஞ்சம்பரமார்த்தத்தி லிறையளவுமி லதேனும்விவகாரத்திற், சித்தினிடைவிவர்த்தமதாஞ்சித் தந்தானே செறிகின்றபிரபஞ்சமெனவேதோன்றும், புத் திரவச்சித்தத்தைப்புகன்றவண்ணம் பூரணமாம்பாவனே யானுசஞ்செய்வாய். என்பதனுனும், (ஞானவாசிட்டம்) கிஞ்சிலாகிவிரிநதுசகத்திரளாய்க் கிளைத்தவிவையெல்லா ம், விஞ்சுபிரமமேயறிவுபிரமமேதினிப்பிரமம், பஞ்சபூத ம்பிரமநாம்பிரமநமதுபகைபிரமந், தஞ்சநட்புக்கிளைபிர மஞ்சங்கராதிநிச்சயமே. அன்றியும், சுரர்குருவின்மக னுரைத்தபடியேயிவ் வுலகெலாஞ்சொரூபமாகும். விரவி யநீள்பிறப்பிறப்பா மிகுமாயையிராசததாமதத்தைமேவு ம், புருடர்தரித்திடவற்றுய்த் துண்சுமக்குமண்டபமே போலநிற்குந், திரமுளசத்துவகுணத்துன் போல்வார்க ளசநபயநதீர்ந்துநிறபார். அன்றியும், வழுவறுசத்துவ குணத்தோர் தோலுரிக்குமரவென்னமாயாபாசம், நழு வுவரெல்லாம்பிரம நாமதுவேயென்றெண்ணி நாமும்வே

றே, முழுதுலகம்வேறென்னு மோகமொழிப்பாய்பிரம மூலசித்தில், எழு வனகற்பனையெல்லாங் கடலிலலைபோ லமெய்யா யில்லையன்றே. என்பதனாலும், (திருவாசகம்) வானாகிமண்ணாகி வளியாகியொளியாகி, ஊனாகியுயிராகி யுண்மையுமாயின்மையுமாய்க், கோனாகியானெனதென் றவரவரைக்கூத்தாட்டு, வானாகிநின்றாயை யென்சொல் லிவாழ்த்துவனே. அன்றியும, பாரபதமணடமனைத்துமா ய்முளைததுப் படர்நததோர் பரவெளிபரப்பே, நீருறுதீ யேநினைவதேலறிய நினமலாநின்னருள்வெள்ளக, சீறுரு சிநதை யெழுநததோரதேனே திருபபெருந்துறையுறை சிவனே, யாருறவெனக்கிங் காரயலுளளா ரானநதமாக் குமென்சோதி. எனபதனாலும், (திருவாய்மொழி) நீராய நிலனாயத தீயாயககாலாய் நெடுவானாய்ச, சீராசுடாக ளிரணடாயசிவனா யயனானாய்க், கூராராழிவெணசங் கேநதிக் கொடியேனபால, வாராயொருநாண மணணும் விண்ணுமகிழவே. அனறியும், உலகமுணடபெருவாயாவு லகபில் கீர்த்தியம்மானே, நிலவுஞ்சுடர்சூழொளிமூர்த்தி நெடியாயடியேனாருயிரே, திலதமுலகுககாய்நினற திரு வேங்கடததெம்பெருமானே, குலதொல்லடியே னுன்பா தங்கூடுமாறுகூறாயே. என்பதனாலுங்கணடுணர்க. (௨)

கவி.

சொருபமொன்றே பிரமமென்ப தெவ்வா றென்னிற் சுசாதிகவிசாதிசுகதபேதம், வருவதி லையானுமபா வஙகளான்கும் வந்தனவானுந்தோற்

ற மனத்தாலன்றித், தருவதிலையானுமண்ணைத் த
விரப்பாண்டந் தானிலையானுமத்தோற்றந் தா
னுங்கானல், உருவலதுவேறுபொருளில்லையானு
மொன்றலதுஜகமிலையென் றுணர்த்துநூலே. *

(இ-ள்) பிரமசொரூபமொன்றே யொழிய விரண்டில்லை யென்பதெவவாறெனனில், நிரவயவமாகியது பிரமமாதலால் சுசாதிக விசாதிக சுகதகங்களுமில்லை, இரண்டாம்வஸ்துவில்லையென்பதறகாக அபாவங்கள்நான்குதிட்டாநதங்களுமறியவநதிருப்பனவாலும், ஆனால்தோற்றும் பிரபஞ்சமோவெனில் அதுமனோசங்கற்பமேயாம். அச்சங்கற்பமு மண்ணைத்தவிரக்கடமிராததுபோல பரமத்தைத்தவிர வேறுகாமையினறை ரூற்றரவாகியபூதபௌதிகப் பிரபஞ்சம் உண்மையாயிலலை; சூரியனிடததிற்கானறசலம்போலவிவர்த்தமே யாதலால் ஒன்றே யொழிய விரணடில்லை; அதுவே நாமாகிய அததுவிதமென்று நாரதர் அருளிசசெய்தாா. எ-று.

சுசாதிகாதிபேதமாவன:—மரத்துக்கும் மறுமரத்துக்கும் சுசாதிபேதம். மரத்துக்கும்கல்லுக்கும் விசாதிபேதம். மரத்தினது இலை, பூ, காய், பழம், சுகதபேதம்.

அபாவங்கள்நான்காவன:—பிராகபாவம், பிரத்துவம்ஸாபாவம், அன்னியோன்யாபாவம், அத்தியந்தாபாவம், இவைகளாம்.

பிரமம் அவயவத்துடனே கூடில், சுசாதிகாதி பே தமுண்டென்று சொல்லலாம். அங்ஙனம் அவயவமற்ற நிரவயவமாதலாலும், சத்துக்கு மறுசத்தில்லாத்தாலும்; கடத்துக்கு மண்ணைத்தவிர வேறில்லையென்றும், கடமென்று தோற்றுவதற்கு முன் மண்ணேயென்றும், கடந் தோன்றிப் பின்புடைநதபோதும் மண்ணேயென்றும், கடத்திற்படமும் படத்திற்கடமும், கற்பனையேயல்லது நிசமில்லையென்றறிந்த அபாவப் பிரமாணங்கள் நான்கு திட்டாந்தங்களினாலேயும்நிருபிச்சில், நீயென்றும்நானென்றும் தொற்றுகிற சுசாதிகபேதமும், நரர் மிருகம் பட்சி தாவரங்களாய்த்தோற்றுகிற விசாதிபேதமும், இந்த நரர் மிருகாதிகளுக்கு வெவ்வேறுகுண கற்பனைகளாகிய சுகதபேதங்களும், கற்பனையேயல்லாது நிசமல்லவாதலின், இங்ஙனம் தோற்றுவதாகிய பிரபஞ்சமெல்லாம் மனோசங்கற்பமேயென்றும், அச்சங்கற்பத் தோற்றமும் கானற்சலம்போல விவர்த்தமேயென்றும், ஆதலால் நீயென்றும் நானென்றும் இரண்டற்ற யேகமே ஐக்யமென்றும், அந்த அத்வைத சொரூபமே அஹமென்றுங் கூறினானெனவறிக.

ஏகமேவாத்வைதம் ப்ரம்மோஹமென்பதற்குப் பிரமாணம். (சிவரகசியம்) சதநியசிற்சுககநமாம்பிரமமொ ?ற சுநததமுஞ்சலியாமதுள்ளதென்றும்,இத்துவிதயர் ?மமொருகாலத்து மில்லையெனுமேகபரநிர்ணயத் த்தமனேயகண்டபரப்பிரமஞான வுரமாகும்பெ

ருட்டுநினக்கின்னுஞ்சொல்வேன், அத்துவிதநிர்ணயமே
மறைபுராண மனைத்தினுமேயத்யந்தசாரமாகும். அன்றி
யும், பேதமிலைப்பேதமிலைப்பேதமில்லை பேதிக்கும்பொ
ருளுமொருக்காலுமில்லைப், பூதமிலைப்பௌதிகமாம்பொ
ருளுமில்லைப் புவனமிலைப்புவனமுறும் பொருளுமில்லை,
ஏதமிலைக்குணமுமில்லையெவையுமில்லை யிதுவெனவிங்கி
லங்கியிடும்பொருளேயில்லை, ஆதிமுடிவொன்றுமிலாதக
ண்டமான வறிவுருவாம்பரப்பிரமமொன்றே யுண்மை.
அன்றியும், பெரிதுமிலைச்சிறிதுமிலைநடுவுமில்லை பின்னுமி
லைமுன்னுமிலைநடுவுமில்லை, அரிதுமிலையெளிதுமிலை நடுவு
மில்லை யயலுமில்லைத்தனதுமிலைநடுவுமில்லை, யொருமை
யிலையிருமையிலைநடுவுமில்லையுள்ளுமிலைவெளியுமிலையொ
ன்றுமில்லை, சருவபரிபூரணமாயச்சலியாச்சித்தாய்ச் சா
ந்தமதாயுளதுபரப்பிரமமொன்றே. அன்றியும், வினவியி
டுஞ்சீஷனிலைக்குருவுமில்லை விளங்கியிடும்வித்தையிலைய
வித்தையில்லைத்.துனிமருவும்பந்தமிலைமோட்சமில்லைத்து
விதமிலையத்துவிதநதானுமில்லை,நனிமகிழுஞ்சுபமுமிலைய
சுபமில்லை நானுமிலைநீயுமிலையாருமில்லை, அனியமிலாவறி
வுருவாயகண்டமாகி யசஞ்சலமாயுளதுபரப்பிரமமொ
ன்றே. அன்றியும், சத்துவமேமுதலியமுக்குணங்களில்
லைச் சாற்றியவக்குணங்களுடைவிகாரமில்லை, அதத்துவித
ந்துவிதமுதன்மதமுமில்லை யவையருளுங்குருசீடருமி
ல்லை, இத்துவிதப்பிராந்தியிறையளவுமில்லை யில்லையென
வியம்பியவிச்சொலலுமில்லைச், சத்துசித்தாகாசமதாய்ச்சு

பரவசத்தாய்ச் சுகசனமாயுளது பரப்பிரமமொன்றே. என்பதனாலும், (ஞானவாசிட்டம்) சோகமில்லைமோகமில்லைபிறப்பில்லை பிறப்பிறப்பிறசுழலவாரில்லை, ஏகமெனவிங்கென்றும் முளைபொருளோயுள்ள திரங்கவேண்டாம், ஊகமுறவருவனபோ வனைத்தையேறவெருந்தனைக ளொன்றுமில்லா, மாகனைசத்துவகுணத்தோ டொருவனுயிடொல்லா மாறறிநிறபாய். அன்றியும், "ஏகவுருவாயுபசாந்த மோனமெய்திநினனுணர்கிற, சோகமற்றசுகியாவாய்." அன்றியும், சித்தமாயைமனஞ்சீவ னென்றுமில்லைதிகழ்பிரம, மொத்தவொனருய்ப்பெருங்கடல்போலுகண்டுவளருமுத்தமனே, போசதவுடலைநானெனவெலம் மட்டுக்காணுமிப்பொருளில, வந்துவெனும்பாவனையெம்மட் டம்மட்டுளமாதியின்மயக்கம். என்பதனாலும், (திருவாசகம்) சோதியாய்த்தோன்றுமுருவமேயருவா மொருவனேசொலலுதற்கரிய, வாதியேநடுவேயந்தமேபந்த மறுக்குமானந்தமாகடலே, தீதிலாநன்மைத்திருவருட்குன்றே திருப்பெருந்துறையுறைசிவனே, யாதுநீபோவதோர்வகையெனக்கருளாய் வந்துநின்னிணையடிதந்தே. அன்றியும், வான்கெட்டுமாருசமாந தழனீர்மண்கெடினும், தானகெட்டலின்றிச் சலிப்பறியாததன்மையனுக், ஊன்கெட்டுயிர்கெட்டுணர்வுகெட்டென் னுள்ளமும்போய், நான்கெட்டவாபாடித் தெள்ளேணங்கொட்டாமோ. அன்றியும், தேவாகோவறியாததேவதேவன் செழும்பொழில்கள்பயந்துகாத்தழிக்குமற்றை, மூவர்கோனய்நின்றமுதல்வன்மூ

ர்த்தி மூதாதைமாதாளும்பாகத்தெந்தை யாவர்கோனெ ன்னையும்வநதாண்டுகொண்டான் யாமார்க்குங்குடியல் லோமியாதுமஞ்சோம், மேவினேமவனடியாரடியாரோ டு மேனமேலுங்குடைந்தாடியாடுவோமே. அன்றியும், முத்தாபோற்றிமுதல்வாபோற்றி, யத்தாபோற்றியரனே போற்றி, யுரையுணாவிறந்தவொருவபோற்றி. என்பதனு னும், (திருவாய்மொழி) யானுந்தானாயொழிந்தானை யா துமெவர்கருமுன்னோனைத், தானுஞ்சிவனும்பிரமனு மா கிப்பணைததநனிமுதலைச, தேனும்பாலுங்கனனலு மமுது மாகித்தித்திததென், னூனிலுயிரினுணர்வினி னின்றவொ ன்றையுணர்ந்தேனே. அன்றியும். நின்றவொன்றையுண ர்தேனுக் கதனுணோமையதுவிதுவென, வொன்றுமொரு வர்கருணரலாகா வுணாநதுமேலுங்காண்பரிது, சென் றுசென்றுபரம்பரமா யாதுமினறிதேயநதற்று, நன்றுதீ தென்றறிவரிதாய் நன்றாய்ஞானங்கடந்ததே. அன்றியும், "யாவருமெவையுநதாமா யவரவர்சமயந்தோறும், தோ ய்விலன்புலனைந்திறகுஞ் சொலப்படானுணர்வின்மூர்த் தி," என்பதனுனுமுங்கணடுணர்க. (ந)

க வி.

பாவாபாவாதீதம்ப்ரம்மோஹமேதாற்பழு தையின்றிப்பாம்புவராப் பண்பினாலும், தாவாத வனுபவதது விரண்டதானுந் தன்னறிவிலுரைப்பி லிரண்டாதலாலும், மூவாதுதானவனாலுமாகா முன்னமிரண்டுளவானு மூன்றாயநின்ற, தேவா

இலசத்துசடர் துக்கநீங்காத் திறத்தானுமிரண்ட
றுதல் சிவமேயான்மா. ... ... ... ... , *

(இ-ள்.) பாவமாகிய உள்ளதான ப்ரம்மத்துக்கும் அபாவமாகிய வில்லாததான பிரபஞ்சத்துக்கும் அதீத ப்ரம்மமேதென்றால் உண்டான அதிஷ்டான ஞானத்தைத்தள்ளக்கூடாது. தள்ளினால் அஞ்ஞானமாய்ப்போமென்று சங்கைவரில் பழுதையுண்டானால் பாம்புமுண்டென்பது போல அதிஷ்டானமுண்டானால் ஆரோபமுமுண்டென்றுவரும். அதிஷ்டானமும் ஆரோபமு மில்லையெனில், சதாகாலமும் ப்ரம்மானுபவமா யிருக்கவேண்டும். அஃதும் அனுபவமும், அனுபவிக்கப்படுகிறதும், இரண்டாதலால், அந்தப்ரம்மத்தை விசாரஞானத்தினால் அறிந்ததுமாத்திரம் போதுமேயென்னில், அங்ஙனம் அறிகிறதும் அறியப்படுகிற பொருளுமாகும். அதுவுமிரண்டாதலால் அந்தப்ரம்மமேதானென்றிருப்பது போதுமெனில், அதுசங்கற்பமாய்த் தானாகாத அஞ்ஞானம் ப்ரம்மத்துக்கேவரும். எங்கும் சச்சிதானந்தலட்சணமாகக்கண்டிருப்பது போதுமெனில், சத்தென்றால் அசத்துமுண்டு; சித்தென்றால் ஜடமுமுணடு; ஆனந்தமென்றால் துக்கமுமுண்டு; வஸ்துலட்சண முண்டென்றால் மாயாலட்சணமுமுண்டாதலால், பாவதிறகும் அபாவத்திறகும் அதீதம் ப்ரம்மம். அதுவே அஹமென்று ஸ்ரீதக்ஷிணாமூர்த்திபகவான் அருளிச்செய்தார். எ-று.

பெத்தநீங்கியமுத்தியில் ஆன்மாவும், சிவமும், கடாகாசமும், மஹாகாசமும், ஒன்ருனாற்போல அதத்துவிதமாதலான அச்சிவமே யாத்மாவென்முர். காரணகாரியத்திற் கப்பாற்படும்பொருளாதலின் பாவத்திற்கும், அபாவத்திற்கும், அதீதமெனலாயிற்று. பாவாபாவாதீதம்பிரம்மோஹமென்பதற்குப்பிரமாணம், (சிவரகசியம்) பரமசிவனருளியவா பின்னுஞ்சொல்வேன் பலவிதமாழபூதம்பொய்புவனம்பொய்யே, உரைதருபாவாபாவ மியாவும்பொயயே யுற்பத்திதிநாசமனைத்தும்பொய்யே, விரிவுபெறு போகம்பொய்பநதம்பொய்யே விடயமுதலியாவும்பொய்விதியும்பொய்யே, சுருதியொடுநூலும்பொய் சொல்லும்பொய்யே சுககனமாம்பரப்பிரமமொன்றே மெய்யாம். அன்றியும், சனனமுதறசட்பாவவிகாரமில்லை சரீரமுதற்சட்பாவ விகாரியில்லை, நனவுமுதனான்குவித வவத்தையில்லை நானுவாமவையினபிமானியில்லைப், பனுவியிபாவமுடனபாவமில்லை பலவிதமாம் வியட்டியில்லைச் சமட்டியிலலை, அனியமிலாவறிவுருவாயகண்டசத்தாயசஞ்சலமாயுளதுபரப் பிரமமொன்றே. என்பதனுனும், (ஞானவாசிட்டம்.) பாவனையுமபாவனையுமுதலுமீறும்பற்றுமுளதும்இலதும்பலவுந்தேசும், மேவறிவுமடமையுமென்றிவைகளின்றி விண்ணிலேயிருப்பதாய விசாலமாகி, யாவதுமாயன்றுகிமனத்தால்வாக்கா லெட்டரிதாயின்பத்திலின்பமாகி, யோவரியநிறைவினிறை வாகியாசை யொழிவிடமாய்த்தன்னுற்றுனுணருமொன்று. எ

ன்பதனாலும், (திருவாசகம்) மூத்தானேமூவாத முதலா னேமுடிவிலலா வோத்தானேபொருளானே யுண்மையு மாயின்மையுமாயப், பூததானேபுகுந்திங்குப் புாள்வே னைக்கருணையினறை, பேர்ததேயாண்டவா றன்றேயெம் பெருமானே, அனறியும், சொற்பதங்கடநததொலலோா ன் உள்ளத்துணர்ச்சியிற கொடளவும்படாஅன். என் பதனாலும, (திருவாய்மொழி) இலனதுவுடையனி தென நினைவரியவன், நிலனிடைவிசும்பிடை யுருவினனருவின ன், புலனொடுபுலனலனொழிவிலன பரநதவந, நலனுடை யொருவனை நணுகினநாமே. என்பதனாலுங்கண்டுகொள்க.

கவி.

தனித்தசுவானுபவாதீதம் ப்ரம்மோவறமே தாற் றனவனாயிருப்பதுவுஞ் சஙகற்பத்தாலும், அனிகதமெனவிடிற்சூன்யமாதலாநு மதுமறவா விடினினைவாயழிதலாலும், இனித்தநிட்டைசாத னமாயிருததலாலு மேதுமற்றன்மூடமென்றே யியம்பலாலும், தொனிததசுபாவமுங்கடந்தவதீ தந்தானே சுயம்பிரகாசமதென்றே சொல்வர்தா மே. ... ... ... ... ... ... ... *

இ-ள்- அதிஷ்டானமுமாரோப மில்லாமற்றனித் து நினறவிடம், சுவானுபவம், அச்சுவானுபவத்திறகதீத ம் ப்ரம்மமெனப தேதெனில், அதிஷ்டானமு மாரோப மு மின்மையான சுபாவஞானம் தானு யிருக்கின்ற

மென்ற நிச்சய மற்றதுவே குற்றமற்ற நிலையாதலால் அ
ச்சுபாவந் தானென்னுமிடத்தில் அங்ஙனம் சங்கற்பமா
தலால் அதுகூடாது. ஏன்கூடாதென்னில், நினைப்பு ம
றப்பாதலாற் கூடாது, அந்த நிர்விகற்பத்தி லதுசங்கற்
பமாமென்றதை அனித்தமென விட்டிற்ற சூன்யமென
க் கொள்ளுமாதலின் அதுவுங்கூடாது. சுபாவம் தானு
ன வனுபவமாகவே எந்நேரமு மிருப்போமென்றால்,
அந்நினைவுஞ் சுழுத்தியிலழியுதா லதுவுங் கூடாது, அங்
ஙனந்தோன்று நேர்மையாகிய நித்தியானந்தசுபாவமா
கவே நிற்றனிலையாமென்னி லதுவுஞ் சாதனமெனக்கொ
ள்ளுமாதலி னதுவுங்கூடாது. காஷ்டம்போல வொன்றுமற்
றுச் சும்மாயிருப்பதே நிலையாமென்னில் அதுவும் மூட
மெனக்கொள்ளுமாதலினதுவுங்கூடாது. ஆதலின சுபா
வமாகிய மௌனத்திற்கும அதீதமாகியது யாதொன்று
ண்டோ அதுவேபரம்மமென்றும், அதுவே அஹமென்று
ம், ஜனகமஹாராசனருளிச்செய்தார். எ-று.

யாதொருசுவானுபவமாய்த தோற்றுதறகு அதீத
ம் ப்ரம்மமாதலால அது அவாங்மனோகோசர மென
மௌனமாகக் காட்டினனென்றறிக.

இவ்வண்ணம் மஹாவாக்கியசாரமெல்லாம் பரோ
க்ஷமாய் காட்டுமென்றால் அபரோக்ஷசித்தி எப்படிகூ
டுமெனின், அதுவே பேசாமற்பேசிக்காட்டும் அனுபவ
த்தில் அத்வைதம் தானே சித்திக்கிருக்குங்குறிப்பு எஞ்
சிநின்றதாதலால் அபரோக்ஷமாகியமௌனாதீதமே பொ
ருளென்பதறிக.

சுவாநுபவாதீதம் ப்ரம்மோஹமென்பதற்குப் பிர மாணம். (சிவரகசியம்) சாதனமுஞ்சாத்தியமுமெவை யுமில்லை சற்சங்கமசற்சங்கமெவையுமில்லை, யோகுவனு மூணர்பவனுமாருமில்லை யுறுகதியுறுதலுமற்றெவையுமி ல்லை, வேதனமும்வேதகியமுமெவையுமில்லை விசாரணை மற்றப்யாசமெவையுமிலலை, போதகனவடிவாகிப்பூன்ற மாகிப் புரையறவேயுளதுபரப்பிரமமொன்றே. அன்றி யும், இருளுமில்லையொளியுமில்லைவெளியுமில்லை யிருமூன்று சமாதிகளுமிலவேயில்லை, வருபிரமவித்துமில்லைவரனுமில் லை வரியானும்வரிட்டனுமற்றுருமிலலை, யொருபொருளு மொருக்காலுமிலவேயிலலை யுள்ளதெலாமுணர்வுருவா ம்பிரமமெனறும், பிரமமேநானெனறுமகண்டஞானம் பெற்றவனேபவபாசமுததனுவன். எனபதனானும், (ஞா னவாசிட்டம்) கசனுயர்சமாதிநீங்கி யொருபகறகளிகரு நெஞ்சன், வசமறத்தழுதழுத்த் வசனத்தணியாதுசெய் கேன், றிசையுறவெங்குசெலகேன் றீர்ப்பதென்கொள்வ தென்னும், இசையுயர்கற்பகீர்போன் மேதினியெங்கும் நானே. அன்றியும், மேனியிற்புறத்தினுள்ளின் மேலொ டுகீழிற்றிக்கில், வானில்வையகத்தி லெங்குநானன்றி மற்றொன்றில்லை, யானிலாவிடமுமில்லை யெனதிடத் திலாதுமில்லை, தானிகழ் பொருள்வேறில்லை சச்சிதா நமென்றான். என்பதனானும். (திருவாசகம்) இ றனக்கருளி யிருள்கடிந்துள்ளத் தெழுகின்றஞாயி போன்று, நின்றநின்றன்மை நினைப்பறநினைந்தே னீ

யலாற்பிரிதுமற்றின்மை, சென்றுசென்றணுவாய்த் தே
ய்ந்துதேய்ந்தொன்றாந் திருப்பெருந்துறையுறைசிவனே,
யொன்றுநீயல்லை யன்றியொன்றில்லை யாருன்னையறியகி
ற்பாரே. என்பதனானும், (திருவாய்மொழி) நன்றாய்ஞா
னங்கடந்துபோய் நல்லிந்திரியமெல்லாமீர்த், தொன்றா
யக்கிடந்தவரும்பெரும்பா ழுலப்பிலதனையுணர்ந்துணர்
து சென்றாங்கின்பதுன்பங்கள் செற்றிக்களைந்துபசைய
ற்றால், அன்றேயப்போதேவீ டதுவேவீடுவீடாமே, அ
னறியும், அதுவேவீடுவீடுபெற் றின்பந்தானுமதுதேறி, எ
துவேதானும்பற்றின்றி யாதுமிலிகளாகிறகில், அதுவே
வீடுவீடுபெற் றின்பந்தானுமதுதேறா, தெதுவேவீடேதின்
பமென் றெய்த்தாரெய்த்தாரெய்த்தாரே. என்பதனானு
ங்கண்டுணர்க, (ரு)

இவ்வாறு சுகப்ரம்மமானவர் வியாசர், நார
தர், தக்ஷிணாமூர்த்தி, ஜனகமஹாராஜன், இவர்க
ளால போதிக்கப்பெற்றுச் சந்தேகநிவாத்தியாய்
அபரோட்ச ஸாக்ஷாத்கார சொரூபரானவொன்று
நான்குவேதங்களின் முடிவாகிய வேதசாராம்ஸ
த்தைத் தமிழ்ப்பனுவலாகச் செய்தருளினார்.

சுகர்வினாதலும் அதற்கு வியாசபகவான் போதித்த
லு மென்பதற்குப் பிரமாணம். (ஞானவாசிட்டம்) வி
டலருமசைவுவிட்டு விடயத்தின்மீணடநெஞ்சன், வடவ
ரையுறையுந்தாதை மருங்குறவெய்தியிர்த, விடருறுமா

யைவந்த தெங்ஙனமிறப்பதெங்ஙன், தொடர்பிலாருடை யதெம்மட் டென்றிதுதோன்றிற்றென்ருன். அன்னவ ன்கேட்டவெல்லா மறிவுறவுரைத்தபோது, முன்னாமு ணர்ந்தவாறே மொழிந்தனையெனவச்சொலலால், நன் னிலைபெருமைகண்டு நல்லுணர்வெனக்குத்தோன்ரு, ம ன்னவன்சனகனென்பான் வழுவறுமுணாவின்மிக்கோ ன். என்பதனுற்காண்க.

சுகருக்குநாரதமஹாமுனிவரால் போதித்ததென்ப தற்குப் பிரமாணம். (மகாபாரதத்தில் சாந்திபருவம்) வேதாந்தசாரமறிவதறகு மிகுமோகியாகிய சுகயோகி யேகேளும் வர்ணாச்சிரமம்நான்கு, அவையாதெனில-ப்ர ம்ம-க்ஷத்திரிய-வைசிய-சூத்திரனென்பனவாம். இநநா ன்கின்பேதமாவது, அக்கியானப்போர்வையல்லதுவேறி ல்லை. உயர்ந்தஜாதியிதுவென்றும், அதுவேமுக்யமென்று ம். தாழ்ந்தஜாதியிதுவென்றும் இதுவேதாழ்மையென்று மில்லை. அஞ்ஞானமகன்ற விஞ்ஞானமெந்தவிடத்தில் வி ளங்குகிறதோ அதுவேபிரதானம், கர்மத்திருல் ஜாதிய ல்லது சென்மத்திறைற்ஜாதியில்லை. ஜாதமென்பதுபிறப் பு, உயர்வுதாழ்வு பேசுவதெல்லாம் அக்கியானபிரபஞ்ச மயக்கம். பிரபஞ்சமாவது, இல்வாழ்வோன்இவன்நாட்டி ல் கிரகஸ்தாசிரமங்கட்டிக் கொண்டிருப்பவன். இதுெ ண்டுகாலுக்கும்போட்டுக்கொண்டவிலங்குபிள்ளைகுட்டி யென்னும் கடையாணியிஞலிறுக்கித் தறிக்கப்பட்டது. பிரம்மச்சாரி ஆச்சிரமம் வானபிரஸ்தாச்சிரமம் இவ்விர

ண்டும்பெருமையுள்ளதென்று பெரியோர்களொப்புக்கொ ள்வது அதிலும்பயனில்லை. அப்பால் அதியாச்சிரமந்தயா ரசமும் சத்தியமுமிருக்கவேண்டியது இவ்விரண்டில் க டுகத்தனைதப்பிப்போனால் மலையத்தனை நரகமும்வந்துமு ண்ணிற்கும். தெரியாமல் தவறினவனுக்கு ஒருபங்குதண் டனை; ஆனபடியால் வண்டியுருளைப்போலகீழதுமேலதா ய் சுழன்றுக்கொண்டிருக்கப்பட்ட சனனமரணமானது தீராது; அதுஎன்றைக்குத்தீருமென்றால் நானென்பது ந சித்துத்தானென்பது தவிர்ந்து ஆணவமலமகன்றதானால் சராசரகோடிசகலாத்மாவுந் தானேயல்லது வேறில்லை. சமஸ்ததேகாதிகளெல்லாம் சம்பந்தம்மாயை, ஆத்மாப ரிசுத்தம்; மாயாமயக்கத்திலகப்பட்டு மருண்டுகிடக்கின் றது. மாயைவசத்தாகிய உடலுக்கும் களங்காகிதமான உயிருக்கும்சம்பந்தமில்லையென்றறி; இதையென்றைக்கு வேறாககாண்பானோ அந்தயிடமேமோட்சம். அபபோ து நிராமயமும் நிஷ்களமும் நிர்விகற்பமும் நிர்க்குண மும் தானேயாவான். அப்படிக்கிருளும் வெளிச்சமு மில்லாதவிடத்திலிருந்துபார்க்கில் சகலமும் எளிதில்வெ ளிச்சமாய்த்தோறறும்; அப்படிப்பட்ட ஞானசொரூபி யாய்த்தானிருக்க அதைவிட்டுவிட்டு மாயாமயக்கமாகி ய உலகத்தைதானென்றெடுத்து மேற்போட்டுக்கொண் டு தனக்குரியஞானசொரூபத்தைமறந்து எத்தனைநாள் திரிகின்றானோ அத்தனைநாளுந் தன்னைத்தானறிகிறதெளி வுவரமாட்டாது. பிரபஞ்சவாஞ்சை மயக்கத்திற் படி யாமல் தற்சுபாவ தற்சொரூபமான சுகயோகியே யெ

ன்று ஞானோபதேசம்பண்ணி அனுபோகமுங் காட்டியபோது ஜோதிவிளக்கமான சுத்த ஞானசமுத்திரத்தில் மூழ்கி, ஜனனகடலைத்தாண்டி யெங்குந்தானாகிய ப்ரம்மகஙியானம்விளங்கிப் பறறின்றியுற்ற உததமச்சுக யோகியானவர் நற்றவமடைய உத்தரதினசக்குப்போக வேண்டுமென்று வியாசரைப்பணிநது செலவுகேட்டார். என்பதனானுமுணர்க.

சுகர்விறைதலும் அதற்குத்தகுஷிணமூர்த்தி போதித்தலுமென்பதறகுப பிரமாணம்.

(வள்ளலார்சாஸ்திரம்) பொய்ப்பிரமையொழியதிருக் கல்லாலின்புடையெழுநதோய, செப்புமுறையறியாத சிற்றடியேன்விண்ணப்பம், அப்பிரமேயபொருளாமறிவென்னிலறிபுவர்யார், சுப்பிரமமுடனேயுறுந் தோற்றியுமென்றேற்றுவே. அருந்தவர்க்காய்க்கல்லாலினகத்திருந்ததெய்வமே, புரங்கடந்தாறறுரியநிலைப் பொற்பொதுவுங்கடந்தேறி, யிருநதபடியிருவெனறு லேழையேன்விண்ணப்ப, நிரந்தரநாமென்றறியி னிடேதமெனேவிதியென்னே. வேதியர்ககாய்க்கல்லாலின் வீற்றிருந்ததெய்வமே, போதமிலாப்புன்மதியேன் பொய்யாதவிண்ணப்பம், பேதமிலையெனிறபேதம் பெற்றமையென்பினும்பேதம், போதுமோர்பிராந்தியெனிற், பூரணர்க்கேனிப்பொய்மை. ஆதலாலடியேனுக் ககநதெளியவிடைதேற்றிக், காதலாலடியேனைக் காப்பையெனக்கைகுவித்துச், சீதரன்முன்னறியாத திருவடிக்கீழ்வீழ்ந்தலறிப்,

போதமசைவற நின்றன்புரமட்டோன்புகலுமால். சத்தியமீதிதற்கையஞ் சாராதுசமுசயமா, மித்தையிதிலொழிந்துபோ மிவ்விடைக்குவிடையில்லை சுத்தகிளிப்பெயரோய்கேள் சுருதிமுடிவினுஞ்சார, மெய்பததமறையொன்றலுன் விரிவொடுகுமிஃதறிதி. பாவாபாவாதிதம்பிர் மோகமெனப்பகரு, மூவாதவாக்கியத்தின முடிவறியின் மூன்மாயை, நீவாதபின்மாயை யிரண்டிற்குநீண்டிருக்கும், ஓவாதபரப்பிரம நீயாமென்றுணாகண்டாய். கேவலசகலமென்னக் கிளைதெழுமாயைதன்னைக், கேவலஞானத்தாலேகிழித்தறிவாகின்றபாய், பூவலம்புரிந்தமாந்தர் புண்ணியதீர்த்தமாதி, யாவலாய்ததானமாதி யாகமாதியவிதாமால். காரணகாரியங்கடந்த கரிப்பிரமநாமென்றே, யாரணநூற்புகனறபடியனுபவிப்பாயருந்தவனே, காரியமேழ்காரணமேழ் கழறினுபாதிகளாகுங், காரியமுன்பாலுடைத்துக் காரணமக்கடவுடன்பால். தேகமொடுபொறிகரணஞ் செறியுயிரோடேழென்பா, ராகிலுயிருபாதியிதாலகிலேசனுபாதிசொலிற், சோகமிலாச்சருவசிருட்டி முதறசருவாந்தரியாமி, யாகமுறஞ்சுக்முனிவகடையேழும்பரிந்தறியே. பாவனையெலலாமிறநதாற் பாழன்றேப்ரமேட்டி, பாவனையெலாமிருந்தாற படுசகமன்றேவிரண்டு, மோவியதேங்கின்னிலைய முபாதியறுசூனியமா, யோவியம்போனிருவிகற்ப வுணாவாயநில்சுகமுனிவ. அறிவையன்றியறியப்படும்பொருள், சிறிதுமில்லையெனத்தெளியாவிடின், மறியுமைம்புலவாதைத்திரைகளில், பிறவிமைக்கடலில்வீழ்வைபெருந்தவ. அனந்

தகுணகலியாண வப்பிரமேயப்பொருளே, மனந்தடுமா ருநிலையம்வகுத்த நந்திவாகனனே, தனந்தனியேயிருந் தாடுஞ்சங்காரகாலத்தின், மூனாநதபரவெளிக்கோயின் முக்கணநின்னை யுய்ந்தேன். வேதநாரணன்புள்விலங்கா கியு, மாதியந்தமறிந்தனரிலலையாற், பேதபாவனைநீத்து ப்பெருந்தகாய்ப், பாதமாமுடிபறறியதென்கொலோ. உ ளதிலதாம்பொருண்முடிவி னுறுபொருளையான்கண்டே, னுளதிலதேபொருளென்னு முணர்விலிகள்காண்பாரோ, வளவிலாப்பொருண்முடிவைக் கண்டேநின் னருட்கண் ணு, லளவிலாவாநந்தம் பெற்றேன்யார்பெறுவாரோ. என் பதனாற்காண்க.

சுகர் விளைதலும் அதற்கு ஜனகமஹாராஜன் போ தித்தலு மென்பதற்குப் பிரமாணம். (ஞானவாசிட்ட ம்) ; ஆயவன்றனையேகேட்கென் றருளொடுதாதையே வப், போயினன்சனகன்வாழும் பொன்மனைவாயிற்சேர் ந்தான், தூயவன்வரவுகேட்டுச்சோதிப்பான்கருதிமன்ன ன், ஏயினனில்லைநாளே ழிருநதனன்விகற்பமில்லோன், மற்று நாளேழும்வேறோரிடத் துறவைத்தபின்னர், பொ ற்றிரளழகாரந்தப் புரத்திடைநாளேழ்வைத்து, சிற்றி டைமகளிர்போகஞ் சிறந்தவூணளிப்பத்துய்த்தான், குற் றமுங்குணமுநாடான் குளிர்நிறைமதியமொத்தான். ஆ ங்கவனிலைமைநோக்கி யடிபணிந்தரசன்போற்றி, தாங்கு லகத்தின்செய்கைதவிர்ந்து பேறனைத்தும்பெற்றோய், ஈங்

கூறுபொருளேதென்ன வெங்ஙனமாயைதோன்றிற், றோ ங்கியதெங்ஙன்போவதுள்ளவா றுரைசெய்யென்றான். மெய்ம்முறை முனிவன்கேட்ப வேந்தனும்வியாசன்சொ ன்ன, வம்முறையுரைத்தலோடு மறிஞனும்விவேகத்தான் முன், இம்முறையறிந்தேனீயு மெந்தையுமதுவேசொன் னீர்,ெ மாய்ம்முறைநூல்களெல்லாமொழிபொருளொன் றேயென்றார். தன்னுள்விகற்பித்தெழுந்தவிகற்பம் போ கிற் றவிர்ந்திடுமாயையிற்பயனோர்சற்றுமில்லை, இன்னவ கைத்தோருண்மையியம்பவேண்டுமியாவர்மயக்குமா ற்றுமிறைவாவென்ன, மன்னனதற்குரைசெய்வான் முனி வனீயேமதித்துணர்ந்தும் பிதாவுரைக்கமறுத்துங்கேட் டாய், அந்நிலையேநிச்சயமிங்ககண்ட ஞானவாகாயபுரு டனுளனயலொன்றில்லை. அவ்வறிவுசங்கற்பத்தாற்கட் டுண்ணுமதுவிடில் வீடுறுமந்தவறிவுதன்னைச், செவ்விதி னீயறிந்தனையாற் போகத்திச்சை ஜெகக்காட்சியனைத்தி னையுந்தீர்தியானாய், எவ்வமற்நிறைமனத்தாலடையற் பா லயாவுமடைந்தாய்காட்சிஃகெட்டாதொன்றிற், கவ்வை யறவடைகின்றாய் முத்தனானாய் கருத்திலுறுமயக்கமெ னுங்கவலைதீர்வாய். சனகனெனுமன்னவர்கோ னிவ்வா றோதத் தன்னிலையாம்பரம்பொருளிற்றளர்ச்சியாறி, வ னகசுகன்பயநீங்கிசோகமாறி யயர்வகன்றுசெயலடங்கி யையந்தீர்ந்து, கனகவரையேறிநிருவிகற்பமான கலங்

நாதசமாதியிற்சிற் ககனத்துற்ருன், தினகரனைச்செறி வருடமீரைஞ்ஞூற்றிற் றிரியொடுநெய்மாண்டவிந்தீய ம்போன்றே. ன்பதனாற்காண்க.

திருச்சிற்றம்பலம்.

சுருதிசாரம் மூலமும் உரையும்

மேற்கோளுடன்

முற்றுப்பெற்றன.

ப ர ம கு ர வே ந ம ஃ.

——:o:——